மென்று கூறுகிறார்கள். அதனால் மின்சாரக் கட்டணம் செலுத்துவதற்கு தாமதம் ஏற்பட்டால் டிஸ்கனெக்ஷன் நோட்டீஸ் கொடுக்காமல் இணைப்பை வெட்டுகிற நிலைமையை உடனே மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எங்கள் சமூகத்தைப் பொருத்தவரையில் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் பலவிதமான புகார்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொருத்தவரையில் சில கிராமங்களில் பரம்பரையாக இந்தச் சமூகத்தினருக்கு விடப்பட்ட மானிய நிலங்களை எல்லாம் இப்போது சர்க்கார் தரிசு என்று மாற்றியிருக்கிறார்கள். அதைப்பற்றி எத்தனையோ மனுக்கள் சர்க்காரிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பதிலே இல்லை என்று சொல்கிறார்கள். இந்தப் புகார் அதிகமாக செங்கற்பட்டு, தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களிலிருந்து என்னிடத்தில் வந்திருக்கின்றன.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிப்பட்ட நிலைமைகள் எந்த ஆண்டிலிருந்து நடைபெறுகிறது ? புதிய சர்க்கார் வந்ததற்குப் பிறகா அல்லது முன்பிருந்தா ? அப்படிப்பட்ட புகார்களை கனம் உறுப்பினர் அவர்கள் இந்த மன்றத்திற்கோ அல்லது அரசாங்கத்திற்கோ எழுதி அனுப்பத் தயாராக இருக்கிறாரா ? இருந்தால் இந்த அரசாங்கம் தீவிரமாகவும் மிகுந்த அனுதாபத்தோடும் அவற்றைக் கவனிப்பதற்குத் தயாராக இருக்கிறது.

திரு. எம். அய்யாசாமி : எந்த அரசாங்கம் என்பதில்லை. இப்போது சமீபத்தில் அவர்கள் இது சம்பந்தமாக முறையிட்டிருக்கிறார்கள். ஜமீன் நிலங்களை அயன் நிலங்களாக மாற்றுவதற்கு செட்டில்மெண்ட் சம்பந்தப்பட்ட தாசில்தார், செங்கற்பட்டு மாவட்டத்தில் காஞ்சிபுரம் தாலுகாவில் செய்கிறார். நான் சமீபத்தில் அங்கே போயிருந்தபோது தகராறு என்று சொல்லி அது குறித்து மனு கொடுத்திருக்கிறார்கள். அதனுடைய காப்பியை என்னிடம் கொடுத்தார்கள். அதை அமைச்சரிடத்தில் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். இது நடந்தது இப்போது பத்து பதினைந்து நாட்களுக்குள். இதைப்போல பல புகார்கள் வருகின்றன. கிராமங்களில் குறைந்த கூலிக்கு வேலை செய்கிறவர்கள் இந்த சமூகத்தை சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால் அந்தக் காலத்தில் பூமியை அவர்களுக்கு மானியமாக விட்டிருக்கிறார்கள் இப்போது அவற்றை சர்க்கார் தரிசு என்று மாற்றி வேறு யாருக்கோ கொடுப்பதற்கு சிறிய அதிகாரிகள் முயற்சி செய்துவருகிறார்கள், என்று சொல்லப்படுகிறது. மிகப் பின்தங்கிய மருத்துவர், சலவையாளர் பிரச்னைகள் மிகவும் மைனாரிடி சமூகத்தவர் என்ற முறையில் அனுதாபத்தோடு கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 6.00 p.m.

VICE-CHAIRMAN (THIRU N. V. NATARAJAN) : மன்றம் இத்துடன் கலைந்து நாளை பிற்பகல் 3 மணிக்கு மீண்டும் கூடும்.

The House then adjourned. 6-08 p.m.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

122. Notification issued with G.O. P. No. 2079, Revenue, dated 27th November 1967, exempting from liability to tax the sales of spinning and other crafts, equipments and spare parts by Gandhigram Khadi department, Madurai District; and its authorised agents. [*Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act 1 of 1959.)*]

[6th March 1968

123. Notification issued with G.O. Ms. No. 2073, Rural Development and Local Administration, dated 13th November 1967, regarding postponement of quinquennial revision work till 31st March1969 in certain Municipalities specified in the schedule and in respect of the Kodaikanal Township Committee. [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Madras District Municipalities Act*, 1920 (*Madras Act V of* 1920.)]

124. Notification issued with G.O. P. No. 2010, Revenue, dated 17th November 1967. exempting from the liability to tax, the sales of Condoms [*Laid on the Table of the House under section* 53 (5) *of the Madras General Sales Tax Act*, 1959 (*Madras Act* 1 *of* 1959.)]

125. Notification issued with G.O. P. No. 2150, Revenue, dated 13th December 1967, exempting from liability to tax, the sales of handloom pillow covers. [*Laid on the Table of the House under section* 53 (5) *of the Madras General Sales Tax Act*, 1959 (*Madras Act* 1 *of* 1959.)]

B. Reports, Notifications and Other Papers.

Nil.

APPENDIX.

(*Vide* answer to Starred Question No. 186 on page 379.)

(அ) தமிழக அரசு பங்கீட்டிலிருந்து மோட்டார் வண்டிகள் வழங்கப்பட்ட சட்டமன்ற, சட்டசபை உறுப்பினர்கள்.

1. திரு. வி. ஆர். நெடுஞ்செழியன், எம்.எல்.ஏ.
2. திரு. ஆர். கிருஷ்ணசாமி கோபாலர், எம். எல். ஏ.
3. திரு. ஏ. டி. ஏ. பி. சுந்தரவேல், எம்.எல்.ஏ.
4. திரு. ப. உ. ஷண்முகம், எம். எல். ஏ.
5. திரு. பி. வெங்கடாசல தேவர், எம். எல். சி.
6. திரு. டி. கரிச்ச கவுடர், எம். எல். ஏ.
7. திரு. ஏ. பி. தர்மலிங்கம், எம். எல். ஏ.
8. திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரிப், எம். எல். ஏ.
9. திரு. பி. ஆர். சீனுவாச படையாச்சி, எம். எல். ஏ.
10. திரு. எம். கருணாநிதி, எம். எல். ஏ.
11. திரு. கே. மாரப்ப கவுண்டர், எம். எல். ஏ.
12. திரு. என். சவுந்தரபாண்டியன், எம். எல். ஏ.
13. திரு. கே. அன்பழகன், எம். எல். சி.
14. திரு. எம். தண்டாயுதபாணி, எம். எல். ஏ.
15. திரு. இராம அரங்கண்ணல், எம். எல். ஏ.
16. திரு. ஆர். கோவிந்தராஜுலு நாயுடு, எம். எல். ஏ.
17. திரு. ஜி. ராஜாராம், எம். எல். ஏ.
18. திரு. ஏ. ராகவ ரெட்டி, எம். எல். ஏ.
19. திரு. கே. பாலசுப்பிரமணிய ஐயர், எம். எல். சி.
20. திரு. ஜே. பொன்னுசாமி வில்லவராயர், எம். எல். ஏ.